பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 16 ஞாயிற்றுக்கிழமை 02.11.2025 கதிர் 357

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் கோரிக்கையின் பேரில் சகல கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இளம் அரசியல்வாதிகள் 16 பேரடங்கிய குழு ஒன்று ☞2

## போக்குவரத்து கட்டணங்களில் மாற்றம் இல்லை

வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் பெற்றோல் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்ட நிலையிலும், போக்குவரத்து கட்டணங்களில் எவ்வித மாற்றங்களையும் ஏற்படுத்தப் போவதில்லை என தனியார் பேரூந்து மற்றும் முச்சக்கரவண்டி சங்கங்கள் தெரிவித்துள்ளன.

ஒக்டேன் 92 ரக பெற்றோல் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதோடு, சுப்பர் டீசல் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒக்டேன் 9, ஒட்டோ டீசல் மற்றும் மண்ணெண்ணெய் என்பவற்றின் விலைகளில் எவ்வித மாற்றமும் இல்லை. அதற்கமைய ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றரொன்றின் புதிய விலை 294 ரூபாவாகும். சுப்பர் டீசல் லீற்றரொன்றின் புதிய விலை 313 ரூபாவாகும்.

ஒக்டேன் 95 ரக பெற்றோல் விலை 335 ரூபாவாகவும், ஒட்டோ டீசல் லீற்றரொன்றின் விலை 277 ரூபாவாகவும், மண்ணெண்ணெய் விலை 180 ரூபாவாகவும் காணப்படுகிறது. இந்த விலை திருத்தங்களுக்கமைய லங்கா ஐ.ஓ.சி. மற்றும் சினொபெக் என்பனவும் விலைகளில் திருத்தங்களை மேற்கொண்டுள்ளன.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அகில இலங்கை முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர, எரிபொருள் விலை திருத்தம் தொடர்பான அறிவிப்பு வெளியானதிலிருந்து எமது கட்டணங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமா எனப் பலரும் கேட்கின்றனர். மாதாந்தாம் எரிபொருள் விலைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதற்காக எம்மால் மாதாந்தம் போக்குவரத்து ☞2

# செம்மணியைப் புதைக்காதே உண்மையை வெளிப்படுத்து

### சம உரிமை இயக்கம் யாழ். நகரில் போராட்டம்







செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி வேண்டி நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் நகர் பகுதியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. சம உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில், 'செம்மணி மனிதப் புதை குழியை மீண்டும் மூடி மறைப்பதை நிறுத்து! உண்மையை வெளிப்படுத்து!!' எனும் தொனிப்பொருளில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பாதாகைகளைத் தாங்கியபடி சுமார் ஒரு மணி நேரம் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. கொழும்பிலிருந்து வந்த சிங்கள வர்கள் பலரும் இந்தப் ☞2

# பொலிஸார் ஊடாக எதிர்க் கட்சிகளை முடக்கி தனி ஆட்சி அமைப்பதே ஆளும்தரப்பு நோக்கம்

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

இன்று சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் பொலிஸ்மா அதிபரிடம் வழங்கப்பட்டு, ஜனநாயகம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. பொலிஸ்மா அதிபர் ஊடாக எதிர்க்கட்சிகளை முடக்கி தனி கட்சி ஆட்சியை முன்னெடுப்பதே ஆளும்தரப்பின் நோக்கமாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபர் நாடாளுமன்றத்துக்கு அழைப்பட்டு, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பு குறித்து வலியுறுத்தப்பட்டமை தொடர்பில் அவரிடம் ☞2

## அரச இல்லத்திலிருந்து வெளியேறும் சந்திரிகா

முன்னாள் அரசுத் தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, கொழும்பு சுதந்திர வீதியில் உள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து தனது உடமைகளை வெளியேற்றி அதனைவிட்டகலும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

முன்னாள் அரசுத்தலைவர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்புரிமைகளை இரத்துச் செய்வதற்கான சட்டமூலம் அண்மையில் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர்கள் அரசால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வதிவிடங்களை விட்டு வெளியேற வேண்டியுள்ளது.

# அபிவிருத்திக்குப் பதிலாக பாதாள உலகம் இதுவே இன்று இலங்கையின் கலாசாரம்

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு

நாட்டில் தற்போது அபிவிருத்தி கலாசாரத்துக்கு பதிலாக பாதாள உலக கலாசாரமே நடைமுறையிலுள்ளது. தாம் எதிர்பார்த்த புதிய இலங்கை உருவாக்கப்பட்டுவிட்டதா என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கொழும்பு மத்திய தொகுதியின் கிழக்கு மாளிகாவத்தை மற்றும் கெத்தாராம பிரிவுகளில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் மேம்பாட்டிற்காக நடைபெற்ற மக்கள் கூட்டத்தில் உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞2

## ரூ. 3 கோடி பெறுமதியான கேரள கஞ்சா பருத்தித்துறை தேடுதலில் சிக்கியது

### 4 சந்தேகநபர்களும் கைது

பருத்தித்துறை - சுப்பர்மடம் கடற்பகுதி ஊடாக கேரள கஞ்சா போதைப்பொருள் கடத்தல் சம்பம்வம் இடம்பெற்று இடமாற்றாப்பட்ட நிலையில் பருத்தித்துறை பொலிசாரின் தீவிர நடவடிக்கையின் மூலம் சுமார் மூன்று கோடி ரூபாவிற்கு அதிக பெறுமதியுடைய 100 கிலோவுக்கு அதிக எடையுடைய கஞ்சா பொதிகள் ☞2

# மேற்குக் கடலில் படகுடன் 6 சந்தேகநபர்கள் கைது

போதைப்பொருட்களை கடத்திச் சென்றதாக சந்தேகிக்கப்படும் பல நாள் மீன்பிடிப் படகொன்றுடன் 6 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேற்கு கடற்பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக கடற்படை பேச்சாளர் கமாண்டர் புத்திக சம்பத் தெரிவித்தார்.

கடற்பிராந்தியத்தில் போதைப்பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கடற்படையினரால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் சுற்றி வளைப்புக்களின் ஒரு பகுதியாக இந்த சுற்றிவளைப்பும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் போது சந்தேகத்துக்கிடமாக பயணித்த மீன்பிடி படகொன்றை கடற்படையினர் சுற்றி வளைத்துள்ளனர். படகிலிருந்த 6 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் குறித்த படகுடன் கரைக்கு அழைத்து வரப்பட்டு, மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கடற்படை பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். ☞2



## ஐ.நா. பொறிமுறை குறித்த முறைப்பாடு பற்றி ஆராய்வு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான வெளியகப் பொறுப்புக்கூறல் பொறிமுறை தொடர்பில் அளிக்கப்பட்ட முறைப்பாடு குறித்து உத்தியோகபூர்வமாக ஆராயப்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளகக் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

யாழ்ப்பாணம் வந்துள்ளது.

வடக்கின் அரசியல் மற்றும் பொருளாதார நிலவரத்தையும், அப்பிராந்தியங்களின் இயங்கு நிலையையும் புரிந்துகொள்ளும் நோக்கில் இந்தக் களப் பயணம் திட்டமிடப்பட்டுள்ளது. நேற்று வடக்கிற்கு வந்த இந்தக் குழுவினர் காங்கேசன்துறை துறைமுகம்மற்றும்பலாலிவானூர்திநிலையம் என்பவற்றைப்பார்வையிட்டதுடன் அவற்றின் அபிவிருத்தியில் உள்ள தடைகள் பற்றிய கலந்துரையாடல்களிலும் பங்கேற்றனர்.

வடக்கின் அரசியல் மற்றும் பொருளாதார இயங்கு நிலையைத் தென்னிலங்கை அரசியல்வாதிகள் புரிந்துகொள்வதற்கு வாய்ப்பேற்படுத்தும் வகையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வேண்டுகோளுக்கு இணங்க 'கோலிஷன் ஃபோர் இன்க்லூஸிவ் இம்பக்ட்' எனும் அரச சார்பற்ற அமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

'கோலிஷன்ஃபோர்இன்க்லூஸிவ்இம்பக்ட்' (சகலரையும் உள்ளடக்கிய மாற்றத்துக்கான கூட்டிணைவு) அமைப்பின் ஏற்பாட்டில் கொழும்பில் இருந்து வெள்ளிக்கிழமை (31) புறப்பட்ட இக்குழுவில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில்சித்ரால்பெர்னாண்டோ, அமிலபிரசாத் சிறிவர்தன, சமிந்த்ரனி கிரியெல்ல, சத்துர கலபத்தி ஆகியோரும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் மொஹமட் ஆத்தீஃப்பும், ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன சார்பில் காசிலிங்கம் கீத்நாத், மிலிந்த ராஜபக்ச, சமன்பிரிய ஹேரத் ஆகியோரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் பியன் குருகேவும், பிவிதுரு ஹெல உறுமய சார்பில் அஞ்சன உதாரவும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் கனிஷ்டா மைக்கேலும், சர்வ ஜன சக்தி சார்பில் ராஜித ஹப்பு ஆராச்சியும், தமிழ் முற்போக்குக்கூட்டணிசார்பில்சந்திரகுமாரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் மொஹமட் அஸ்மியும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் நிதன்ஷன் மற்றும் மயூரன் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

வடக்கின்நிலவரம் மற்றும் உண்மைகள் தொடர்பில் நேரடியாக அறியாத கொழும்பு அரசியல்வாதிகள் நல்லிணக்கம், காணி உரிமை, பொருளாதார உள்ளீர்ப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தேசிய ரீதியில் இடம்பெற்றுவரும் வாதப் பிரதிவாதங்கள் குறித்து விரிவாகப் புரிந்துகொள்வதற்குப் பங்களிப்புச் செய்வதே இந்தப் பயணத்தின் முதன்மை நோக்கமாகும்.

வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தை வந்தடைந்த இந்தக் குழுவினருக்கு இந்திய கொன்சியூலர் அலுவலகத்தினால் யாழ். கலாசார நிலையத்தில் வரவேற்பு நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிந்தது.

அதனைத் தொடர்ந்து நேற்று 'கோலிஷன் ஃபோர் இன்க்லூஸிவ் இம்பக்ட்' அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்களுடன்இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியின்பொதுச்செயலாளர்சுமந்திரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சத்தியலிங்கம், சாணக்கியன் ஆகியோரும் இணைந்து மேற்படி அரசியல் பிரதிநிதிகள் குழுவினருக்கும் வடமாகாண மற்றும் உள்ளூராட்சிமன்றங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும்தமிழ்அரசுக்கட்சிஉறுப்பினர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது.

வடக்கில் உள்ள உள்ளூராட்சிமன்ற நிர்வாகத்தில் நிலவும் பிரச்சினைகள், அதிகாரப்பகிர்வு, அரச சேவைகளுக்கான மக்களின் அணுகல், பொலிஸ் அராஜகம் மற்றும்கண்காணிப்பு, பிராந்திய இணைப்பு, மனித உரிமைகள் உள்ளிட்டவை தொடர்பில் தெளிவூட்டும் வகையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் இருந்துகாங்கேசன்துறைவரை தொடருந்தில் பயணம் மேற்கொண்ட அக்குழுவினர், காங்கேசன்துறை துறைமுகத்தையும் பலாலி விமான நிலையத்தையும் சென்று பார்வையிட்டனர். அதுமாத்திரமன்றிதுறைமுக மற்றும் விமான நிலைய அதிகாரிகளால் அவற்றின் செயற்பாடுகள் குறித்து விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

மேலும்இப்பயணத்தின் இறுதிய நாளான இன்று (2) யாழ் பொது நூலகத்துக்குச்சென்று பார்வையிடவுள்ள அக்குழுவினர், பல்வேறு சந்திப்புக்கள்மற்றும்கலந்துரையாடல்களிலும் பங்கேற்கவுள்ளனர்.

இதுபோன்ற பயணங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் உண்மையான மன மாற்றங்களை ஏற்படுத்தினால் நல்லது. ஏனெனில் புலிகள் அரசு இடையிலான அமைதிப் பேச்சுக் காலங்களிலும் இதுபோன்ற பல்வேறு 'என்ஜிஒ' செயற்பாடுகளை கடந்த பல தசாப்தங்களிலும் பார்த்திருக்கின்றோம். ஒவ்வொரு தடவையும் அதன் பின்னர் நடக்கும்போர் இன்னும்கொடூரமானதாகவும் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதாகவுமேதீவிரமடைந்துள்ளதைப் பார்த்திருக்கின்றோம். கோடி கோடியாகக் கொட்டி அதற்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு, நல்லிணக்கத் திட்டங்களின் பயன் என்ன என்கிற கேள்விகள் அப்போது எழுந்துள்ளன. அத்தகைய மற்றொரு 'என்ஜிஒ' திட்டமாக அல்லாமல் சிங்கள இளம் அரசியல்வாதிகளாவது தமிழ் மக்களின் நில அமைவையும்அரசியல்பிரச்சினைகளையும் உண்மையிலேயே புரிந்துகொண்டால் எதிர்காலத்திலாவது ஓர் அரசியல் தீர்வு சாத்தியமாகக்கூடும். ..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com

## செம்மணியைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

அடக்கு முறைச் சட்டங்கள் வேண்டாம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய், அனைத்து தேசிய இனங்களுக்கும் சம உரிமையை உறுதி செய், செம்மணியை மீண்டும் புதைக்க இடம் கொடுக்காதே...! உண்மையை வெளிப்படுத்து!!, அனைத்து காணாமல் ஆக்கல்களுக்கும் இப்போதாவது நீதி வழங்கு ஆகிய வசனங்கள் அடங்கிய பதைதைகளை ஏந்தியவாறு அவர்கள் வீதியோரத்தில் நின்று மக்களின் கவனத்தை ஈர்த்தனர்.

## ஐ.நா. .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்காணிப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளகக் கண்காணிப்பு அலுவலகமானது உள்ளகக் கணக்காய்வு, விசாரணை, மேற்பார்வை மற்றும் சேவை மதிப்பீடு போன்ற நடவடிக்கைகளின் மூலம் ஊழியர்கள் மற்றும் வளங்கள் தொடர்பில் ஐ.நா செயலாளர் நாயகம் கொண்டிருக்கும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கும்.

அதன்படி இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் வெளியகப்பொறிமுறை குறித்து இலங்கைப் பிரஜைகள் மூவருடன் இணைந்து அரச சார்பற்ற அமைப்பு ஒன்றினால் செப்டெம்பர் 16, 2025 ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளகக் கண்காணிப்பு அலுவலகத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் பிரகடனத்தின் கோட்பாடுகளுக்குஅப்பால்இலங்கையின்ஒப்புதல்இன்றி ஐ.நா மனித உரிமைகள் பேரவையினால் வெளியகப்பொறிமுறையொன்று நிறுவப்பட்டுள்ளமையானது அதன் சட்டபூர்வத்தன்மை மற்றும்ஐக்கியநாடுகள்சபையின்கட்டமைப்பு என்பனபற்றியகேள்வியைத்தோற்றுவிப்பதாக அம்முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்முறைப்பாடு தொடர்பில் உள்ளக ரீதியில் ஆராயப்படுவதன் காரணமாக, அதன் இரகசியத்தன்மையைக்காரணங்காட்டிஐக்கிய நாடுகள் சபையின் உள்ளகக் கண்காணிப்பு அலுவலகம் மேலதிக தகவல்கள் எதனையும் வெளியிடவில்லை.

## ரூ. 3 கோடி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்கப்பட்டுள்ளதுடன் குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்ட பெண் ஒருவர் உட்பட நால்வர் பருத்தித்துறை பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தெடர்பில் பருத்தித்துறை தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க தெரிவிக்கையில், ஜனாதிபதி அனுர குமார திசநாயக்க அவர்களினால் போதை ஒழிப்புக்கான 'முழு நாடுமே ஒன்றாக' தேசிய செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் முதலாவது போதைப்பொருள் மீட்பு சம்பவமாக இது பதிவாகியுள்ளது. சுப்பர்மடம் கடற்பகுதி ஊடாக கேரள கஞ்சா கடத்தல் தொடர்பில் கடற்படையினரால் வழங்கப்பட்ட தகவலுக்கு அமைவாக பருத்தித்துறை பொலிசாரால் இன்று (01) சனிக்கிழமை அதிகாலை சுப்பர்மடம் கடற்கரையில் விசேட சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது சட்டவிரோதமாக கடல் வழியாக கொண்டுவரப்பட்ட ஒரு தொகை கேரள கஞ்சா பொதிகள் வாகனம் மூலம் எடுத்துச்செல்லப்பட்டிருந்தன. இருந்தபோதிலும் கடத்தலில் ஈடுபட்ட இருவர் படகுடன் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில்கடத்தலின்போதுதுணைபுரிந்த மேலும் ஒரு படகு அடையாளம் காணப்பட்டு பொலிசாரால்பறிமுதல்செய்யப்பட்டது. இரண்டு படகு வெளி இணைப்பு இயந்திரங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து பருத்தித்துறை பொலிஸ் விசேட பிரிவின் தகவலுக்கு அமைவாக நடத்திய தேடுதலின் போது பருத்தித்துறை அவ்வொள்ளை பகுதியில் உள்ள வீடென்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இரண்டு பைகளில் காணப்பட்ட 46 கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன.

இதன்போது குறித்த வீட்டில் இருந்த பெண் ஒருவரும் பருத்தித்துறை பொலிசார் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நால்வரையும் சான்றுப்பொருட்களையும் இன்றைய தினம் பருத்தித்துறைநீதவான்நீதிமன்றில்முற்படுத்தி தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ள அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## போக்குவரத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டணங்களை மாற்றிக் கொண்டிருக்க முடியாது.

இதனைப் பல சந்தர்ப்பங்களில் ஆளும்தரப்பு உள்ளிட்ட சகலதரப்புக்களுக்கும் அறிவித்திருக்கின்றோம். குறைந்த பட்சம் இரு மாதங்களுக்கொருமுறை திருத்தங்களை மேற்கொள்ளக் கூடியவாறேனும் சூத்திரமொன்றை நடைமுறைப்படுத்துமாறு ஆளும்தரப்பை வலியுறுத்துகின்றோம். அடுத்த மாதமாவது அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆட்சியாளர்கள் தயாராக வேண்டும் என்றார்.

இலங்கை தனியார் பேரூந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவிக்கையில், பெற்றோல் விலை குறைப்பினால் பொது மக்களுக்கு எந்த வகையிலும் நிவாரணம் கிடைக்கப் போவதில்லை. பொது போக்குவரத்துக்களில் ஈடுபடும் வாகனங்கள் ஒட்டோ டீசலையே அதிகளவில் பயன்படுத்துகின்றன. ஆனால் அந்த விலையில் எவ்வித திருத்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை. அவ்வாறிருக்கையில்பேரூந்துகட்டணங்களில் திருத்தங்களை மேற்கொள்ள முடியாது என்றார்.

## அபிவிருத்திக்குப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் தற்போது அபிவிருத்தி கலாசாரத்துக்கு பதிலாக பாதாள உலக கலாசாரமே நடைமுறையிலுள்ளது. எதிர்பார்த்த புதிய இலங்கை உருவாக்கப்பட்டுவிட்டதாஎன்ற கேள்விமக்கள்மத்தியில்எழுந்துள்ளது. மாநகர சபை அதிகாரம், நாடாளுமன்ற மற்றும் அரசுத் தலைவர்அதிகாரம்போன்றவற்றைத்தன்வசம் வைத்திருக்கும் தற்போதைய ஆளும்தரப்பு கூறிய விடயங்கள், வழங்கப்படும் எனக் கூறிய சலுகைகள், வாக்குறுதிகள் மற்றும் சேவைகள்எதனையும்நிறைவேற்றவில்லை.

அபிவிருத்தியால் ஒளிரும் நகரத்தை உருவாக்குவோம் என்ற கூற்றுக்கள் இன்று நிறைவேறவில்லை. அபிவிருத்தி நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுவதற்குப் பதிலாகப் பாதாள உலக கலாசாரமே இயங்குகிறது. மக்கள்வீட்டிலிருந்துவெளியேசெல்லும்போது, மீண்டும் வீட்டிற்குத் திரும்புவார்களா என்ற நிச்சயமற்றநிலைஉருவாகியுள்ளது. துப்பாக்கிச் சூடு நடக்குமா அல்லது கொலை நடக்குமா என்ற அச்சம் நிலவுகிறது.

நாட்டு மக்களுக்குச் சமூகப் பாதுகாப்புகூட இன்று இல்லை. தேசிய பாதுகாப்பும் இழக்கப்பட்டு, இந்த ஆளும்தரப்பின் இயலாமையால் சட்டம் ஒழுங்கு குண்டர் கும்பல் மற்றும் பாதாள உலகக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனால் நாடு ஒவ்வொரு நிமிடமும் அச்சத்திலும் சந்தேகத்திலுமே இயங்குகிறது.

ஜனநாயகம் புதைகுழியில் தள்ளப்பட்டுத் தனிப்பட்ட கட்சியின் ஆட்சியை நோக்கி நாடு செல்கிறது. உள்ளூர் சபை தலைவர்கள் கொல்லப்படுதல், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படுதல் போன்ற ஜனநாயகத்தை அழிக்கும் சூழ்நிலையில், பாதாள உலகம் சமூகத்தைக் கட்டுப்படுத்தும் நிலைக்கு நாடு சென்றுள்ளது.

சட்டம் சீர்குலைந்து காட்டுச் சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. நாட்டின் நீதி மற்றும் நியாயம் கிடைக்காத சூழலில் அனைத்து சமூக அமைப்புகளும் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளது. பொய்யான கதைகள் பேசாமல், ஆளும்தரப்பு தனது கடமையை நிறைவேற்ற வேண்டும். மக்கள் பிரதிநிதிகளுக்கு உடனடியாகப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

இந்த ஆளும்தரப்பினால் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட முடியவில்லை. போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழுக்களை ஒடுக்குவோம் என்று கூறும் ஆளும்தரப்பு, அந்த வாக்குறுதியைச் செயல்படுத்தி துப்பாக்கிச் சூடு, கொலைகள் மற்றும் குண்டர் தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என்றார்.

## பொலிஸார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வினவிய போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 3 தசாப்தங்களுக்கும் மேல் கட்சி பேதமின்றிநாடாளுமன்றஉறுப்பினர்களுக்குப் பாதுகாப்புவழங்கப்பட்டது. அமைச்சர்களுக்கு தொகுதிகளுக்குச் செல்லும்போது அந்தந்த பொலிஸ் நிலையங்களால் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. ஆனால்தற்போதுஎதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அந்தப் பாதுகாப்பு இல்லை. கடந்த ஆண்டுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பல அரசியல்வாதிகள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவுக்கு உயிர் அச்சுறுத்தல்இருப்பதாகபொலிஸ்அறிக்கையில் நிரூபனமாகியுள்ளது. இந்நிலையில் எந்த அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கானபாதுகாப்புநீக்கப்பட்டது என பொலிஸ் மா அதிபரிடம் விளக்கம் கோரியிருந்தோம். அது அரசியல் ரீதியான தீர்மானமாகும் என பொலிஸ்மா அதிபர் பதிலளித்திருந்தார்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் அரசியல் ரீதியான தீர்மானம் எடுப்பதற்கு அரசுத் தலைவர்க்கோ, அவர் தலைமையிலான ஆளும்தரப்புக்கோ உரிமை இல்லை. எனவே அரசியல் ரீதியான தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுப்பது தவறாகும்.

தற்போது தேசிய பாதுகாப்பு பெரும் பிரச்சினையாகியுள்ளது. 1988, 1989களில் காணப்பட்டதைப்போன்றநிலைமைமீண்டும் உருவெடுத்துள்ளது. எனவே ஆளும், எதிர்தரப்பு என்ற பேதமின்றி அனைத்து நாடாளுமன்றஉறுப்பினர்களதும்பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு ஆளும்தரப்பிடம் வலியுறுத்துகின்றோம்.

கிராம மட்டங்களில் நிறுவப்படும் பாதுகாப்பு குழுக்கள்கூட இன்று அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன. எதிர்க்கட்சியினருக்கு பாதுகாப்பை நீக்கி, அவர்களை முடக்கி தனிக் கட்சி ஆட்சி முறைமைக்குச் செல்கின்றனர். நாடொன்றில் எதிர்க்கட்சி இல்லாவிட்டால்

தொடர்ச்சி 03ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

## பொலிஸார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயகத்தைப் பாதுகாக்க முடியாது.

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரம் பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளமை முற்று முழுதாக ஜனநாயகத்துக்குப் புறம்பான செயலாகும். பாதாள உலகக் குழுக்களுக்கிடையில் மோதல்கள் இடம்பெற்றாலும், ஒருவரையொருவர் கொல்வதற்கு எவருக்கும் உரிமை இல்லை. நாட்டில் பாதாள உலகக் குழுக்களின் ஆட்சியும் காணப்படுகிறது என்பதை அரசுத் தலைவரும் ஏற்றுக் கொண்டுள்ளார். அவ்வாறிருக்கையில் நாட்டில் ஒவ்வொருவரினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது ஆளும்தரப்பின் பொறுப்பாகும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சுகாதார அமைப்பின் ஆழமான நோய்

இலங்கையின் சுகாதாரத் துறையில் தற்போது நிலவிவரும் முரண்பாடானநிலைஉடனடியாகக்கவனித்துத்திருத்தப்படவேண்டியது. மருத்துவ நிபுணத்துவ ஆலோசகர்கள் (Consultants) கடுமையாகக் குறைந்திருக்கும் அதேநேரம் பொது மருத்துவ அலுவலர்கள் (Medical Officers) எண்ணிக்கை நிரம்பியிருக்கிறது. இது இலங்கையின் சுகாதாரக் கட்டமைப்பில் பல ஆண்டுகளாகப் போதிய கவனமின்றி வளர்ந்து வந்த ஒரு ஆழமான பிரச்சினையைக் காட்டுகிறது.

சுகாதார அமைச்சர் சமீபத்தில் வெளியிட்ட விளக்கத்தின்படி, நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட 2,800 மருத்துவ நிபுணத்துவ ஆலோசகர் பதவி இடங்களில் சுமார் 2,000 பேர் மட்டுமே பணியாற்றி வருகிறார்கள். அதாவது சுமார் 800 நிபுணர்கள் பற்றாக்குறை நிலவுகிறது. மூன்றிலொரு பகுதிப் பற்றாக்குறை. அதேவேளை, மருத்துவ அலுவலர்கள் பிரிவில் பணியிடங்கள் நிரம்பியுள்ளன. இந்த சமநிலையின்மையே இன்று மருத்துவமனைகளின் சேவைத்தரத்தையும், நோயாளி பராமரிப்பையும் கடுமையாகப் பாதிக்கிறது.

இதற்கான தீர்வாக சுகாதார அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ, வெளிநாடுகளில் உள்ள இலங்கை நிபுணர்களை மீண்டும் நாட்டுக்குத் திரும்பி வரும்படி அழைத்துள்ளார். அவர் கூறியபடி, குறிப்பாக மயக்கவியல், அவசரசிகிச்சை (Accident & Emergency), புதிதாகப் பிறந்த குழந்தைகள் நிபுணத்துவம் (Neonatology), மற்றும் பிளாஸ்டிக் சர்ஜரி ஆகிய துறைகளில் கடுமையான நிபுணர் பற்றாக்குறை நிலவுகிறது.

இவை சாதாரண மருத்துவப் பிரிவுகள் அல்ல. இவை ஒரு உயிரைக் காப்பாற்றும் முக்கியமான தருணங்களில் தீர்மானமான பங்கு வகிக்கும் துறைகள். இவை வெறும் நிர்வாக குறைகள் அல்ல; இவை மனித உயிர் கேள்விகள்.

### நிபுணத்துவ இழப்பின் (Brain Drain) விளைவு

பல ஆண்டுகளாக வெளிநாட்டில் பயிற்சிக்காக அனுப்பப்பட்ட மருத்துவர்கள், ஒப்பந்தப்படி நாட்டுக்குத் திரும்பவேண்டியிருந்தபோதிலும், அனைவரும் திரும்பியிருக்கவில்லை என சுகாதார அமைச்சின் உயர் அதிகாரி டாக்டர் அர்ஜுன திலகரத்ன தெரிவித்திருக்கிறார். இது நிபுணத்துவ இழப்பின் இன்னொரு பரிமாணம்.

இலங்கையின் திறமைமிக்க மருத்துவர்கள் வெளிநாடுகளுக்கு வெளியேறுவதற்கான அடிப்படைகாரணங்கள் நன்கு அறியப்பட்டவையே குறைந்த ஊதியம், வேலைச்சுமை, மற்றும் போதிய வசதிகள் இல்லாத மருத்துவமனைகள் என்பன அதற்கான காரணங்கள். இவை சரி செய்யப்படாவிட்டால், நிபுணர்களை திரும்ப அழைப்பது வெறும் அழைப்பாகவே முடிந்துவிடும்.

### ஒரு போலி ஆறுதல்

மருத்துவ அலுவலர்கள் அதிகம் உள்ளதாகச் சொல்லப்படுவது ஒரு போலி ஆறுதலாகும். அவர்களில் பெரும்பாலோர் நிபுணத்துவ பயிற்சி பெறாதவர்கள். ஒரு நாட்டின் சுகாதார தரம் உயர்வது எண்ணிக்கையால் அல்ல, நிபுணத்துவத்தின் ஆழத்தால்தான் என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டும்

சில மாவட்டங்களில், குறிப்பாக தூரமான கிராமங்கள் மற்றும் புதிதாக நிறுவப்பட்ட அடிப்படை மருத்துவமனைகள், இன்னும் ஆலோசகர்களைக் காணவில்லை. நகரங்களில் நிபுணர்கள் திரண்டுள்ள நிலையில், கிராமப்புறங்களில் நோயாளிகள் அடிப்படை ஆலோசனைக்கே மாகாண மருத்துவமனை வரை பயணம் செய்ய வேண்டிய நிலை தொடர்கிறது. இது சுகாதாரத்தில் சமூக சமத்துவமின்மையின் நேரடி பிரதிபலிப்பு.

### முன்னேற்றத்திற்கான பாதை

சுகாதாரத் துறையை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டுமெனில், வெறும் ஆட்சேர்ப்புகளால் அல்ல — திட்டமிட்ட பணியிடப் பங்கீடு, ஊதிய உயர்வு, பணிமூல வசதிகள், மற்றும் தொழில்முறை மரியாதை ஆகியவை உறுதியாக நிறைவேற்றப்பட வேண்டும். வெளிநாட்டில் பயிற்சி பெற்ற நிபுணர்கள் திரும்பும் வழியில் தங்க முடியுமென நம்பும் சூழல் உருவாக வேண்டும்.

இலங்கையின் சுகாதாரம் உலகளவில் பாராட்டப்படும் வலிமையான அடித்தளத்தைக் கொண்டது. ஆனால் அதனை உயிரோடு வைத்திருக்க நிபுணர்கள் தேவையான அளவில் இருக்க வேண்டும். மருத்துவ ஆலோசகர்களின் பற்றாக்குறை என்பது வெறும் எண்ணிக்கை அல்ல — அது நாட்டின் உயிர்காவல் அமைப்பின் இதய துடிப்பில் ஏற்பட்ட குறைவு.

# இலங்கைக்கு வருகிறார் வத்திக்கான் அமைச்சர்

அரசமுறைப் பயணமாக வத்திக்கான் அயலுறவுத்துறை அமைச்சர் பேராயர் பால் ரிச்சர்ட் கல்லாகர் நாளை திங்கட்கிழமை இலங்கை வருவிருக்கின்றார். அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத்தின் அழைப்பினை ஏற்று இலங்கை வரவுள்ள அவர், நவம்பர் 8 வரை நாட்டில் தங்கியிருந்து பல முக்கிய சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளார்.

அரசுத் தலைவர் அநுரகுமார, பிரதமர் ஹரிணி மற்றும் அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்டோருடன் முக்கிய உயர்மட்ட சந்திப்புகளில் வத்திக்கான் அயலுறவுத்துறை அமைச்சர் பங்கேற்கவுள்ளார். இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்தல் மற்றும் மோதலுக்குப் பின்னரான நல்லிணக்கத்துக்கு ஆதரவளிப்பதில் திருச்சபையின் தொடர்ச்சியான ஈடுபாட்டை வெளிப்படுத்தல் என்பவற்றை வத்திக்கான் அமைச்சரின் பயணம் காண்பிப்பதாக அயலுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கும் வத்திக்கானுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டு 20ஆவது ஆண்டு நிறைவுடன் இந்தப் பயணம் அமைந்துள்ளது. வத்திக்கான் அயலுறவுத்துறை அமைச்சர் தனது உயர்மட்ட சந்திப்புக்களின்போது இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் பகிரப்பட்ட மனிதாபிமான முன்னுரிமைகள் குறித்து கலந்துரையாடுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு கொழும்பிலுள்ள காலி முகத்திடல் ஹோட்டலில் இலங்கை - வத்திகானுக்கிடையிலான ஐந்து தசாப்தகால இராஜதந்திர பங்களிப்பை கொண்டாடும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்வில் நினைவுப் பேருரையொன்றையும் அவர் நிகழ்த்தவுள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட தேவாலயங்கள் உட்பட நாடு முழுவதும் உள்ள கலாச்சார மற்றும் மத முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கும் அவர் பயணம் செய்யவுள்ளார்.

# கெஹெல்பத்தர பத்மேயிடமிருந்து கைத்துப்பாக்கி பெற்றவர் கைது

கெஹெல்பத்தர பத்மேயிடமிருந்து கைத்துப்பாக்கியை பெற்றுக் கொண்ட குற்றச்சாட்டில் நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளாதக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மினுவாங்கொடையைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவரின் வீட்டில் நடத்திய சோதனையின்போது துப்பாக்கியுடன் 13 தோட்டாக்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

ஹீனட்டியன மகேஷ் என்பவர் குறித்த தொழிலதிபருக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளதுடன் அச்சுறுத்தல் தொடர்பில் இத்தொழிலதிபர் கெஹெல்பத்தர பத்மேவுக்கு அறிவித்துள்ளார் எனவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதன் பின்னர் கெஹெல்பத்தர பத்மே குறித்த தொழிலதிபருக்கு துப்பாக்கியை வழங்கினார் எனவும் அதற்காக தொழிலதிபர், கெஹெல்பத்தரவுக்கு 350,000 ரூபாய் வழங்கினார் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# வெலிகம தவிசாளர் கொலையாளிகள் பயன்படுத்திய மோ.சைக்கிள் சிக்கியது

வெலிகம பிரதேச சபையின் தலைவர் லசந்த விக்ரமசேகரவைக் கொலை செய்ய துப்பாக்கிதாரிகள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள், புத்தல - கதிர்காமம் வீதியில் உள்ள காட்டுப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று, குறித்த மோட்டார் சைக்கிளை வெள்ளிக்கிழமை, அந்த வீதியில் 16ஆவது மைல் கல்லுக்கு அருகில் உள்ள காட்டுப் பகுதியிலிருந்து கண்டு பிடித்துள்ளனர்.

கொலையை மேற்கொண்ட சந்தேகநபர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றிருந்தனர். சந்தேகநபர்கள் கெக்கிராவப் பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிள் தொழில்நுட்பக் கோளாறு காரணமாகச் செயலிழந்துள்ளது.

இதையடுத்து, அவர்கள் மோட்டார் சைக்கிளை காட்டுப் பகுதியில் போட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். மேலும், அவர்கள் தப்பிச் செல்லும்போது காட்டு யானையின் தாக்குதலுக்கும் இலக்காகி, அதிலிருந்து தப்பி ஓடியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மீட்கப்பட்ட குறித்த மோட்டார் சைக்கிளை, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மேலதிக விசாரணைகளுக்காக கதிர்காமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

# நவம்பர் 4 முதல் தனியார் உயர் தர வகுப்புகளுக்கு தடை

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகள் நவம்பர் 10 தொடங்கவுள்ளன. அதனால் நவம்பர் 4 நள்ளிரவு 12 மணி முதல் உயர்தர மாணவர்களுக்கான கருத்தரங்குகள், செயலமர்வுகள், மேலதிக வகுப்புக்கள் மற்றும் தனியார் வகுப்புக்கள் உள்ளிட்ட அனைத்தும் பரீட்சைகள் நிறைவடையும் வரை தடை செய்யப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சை டிசெம்பர் 5 வரை இடம்பெறவுள்ளது. உயர்தர பரீட்சையை முன்னிட்டு நவம்பர் 7 சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்படவுள்ளது. டிசெம்பர் 8 பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மீள தொடங்கும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

டிசெம்பர் 8 மீள பாடசாலைகள் தொடங்கி டிசெ. 19 வரை கல்வி நடவடிக்கைகள் இடம்பெறும். அன்றுடன் இவ்வாண்டுக்கான சகல தவணைகளும் நிறைவடைவதோடு, டிசம்பர் 31 வரை மீண்டும் விடுமுறை வழங்கப்படவுள்ளது. தொடர்ந்து 2026 ஜனவரி 1 புதிய கல்வியாண்டுக்காக பாடசாலைகள் தொடங்கும்.

தமிழ் மற்றும் சிங்கள பாடசாலைகளில் 2026 ஜனவரி 1 முதலாம் தவணையின் முதற்கட்ட கல்விச் செயற்பாடுகள் தொடங்கி பெப்ரவரி 13 வரை இடம்பெறவுள்ளன. பெப்ரவரி 14 முதல் மார்ச் 2 வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது. முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம் மார்ச் 3 முதல் ஏப்ரல் 10 வரை இடம்பெறவுள்ளது. ஏப்ரல் 11 முதல் ஏப்ரல் 19 வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது.

இரண்டாம் தவணை ஏப்ரல் 20 தொடங்கி ஜீலை 24 நிறைவடையவுள்ளது. மூன்றாம் தவணையின் முதற்கட்டம் ஜீலை 27 முதல் ஓகஸ்ட் 7ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. ஓகஸ்ட் 8 முதல் செப்டெம்பர் 6 வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது. மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் செப்டெம்பர் 7 முதல் டிசெம்பர் 4 வரை இடம்பெறவுள்ளது.

# தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம் சபாநாயகரால் சான்றுப்படுத்தப்பட்டது

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்த) சட்டமூலத்தை சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன செப்டெம்பர் 30 சான்றுரைப்படுத்தினார்.

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்த) சட்டமூலம் 2025.10.21 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் மூன்றாவது மதிப்பீடு செய்யப்பட்டு திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

இந்த சட்டமூலம் 2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தை திருத்துவதற்கான ஒரு சட்டமூலமாகும். 2025 மார்ச் 27 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, 2025 மே 08 ஆம் திகதி டிஜிட்டல் பொருளாதார அமைச்சரினால் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட இந்த திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக முதன்மைச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, இந்த சட்டமூலத்தின் ஊடாக முதன்மைச் சட்டவாக்கத்தின் 1, 12, 17, 18, 19, 20, 24, 25, 52, 53, 56 ஆம் பிரிவுகள் மற்றும் ாணுா ஆம் அட்டவணை திருத்தப்படுவதுடன், 26 ஆம் பிரிவு மாற்றீடு செய்யப்படுவதுடன், முதன்மைச் சட்டவாக்கத்துக்கு 51அ எனும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றது.

எதிர்காலத்தில் தரவுகள் தொடர்பில் ஏற்படும் நிலைமைகளுக்கு தயாராவதுடன், அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நிறுவனமொன்று இருப்பதன் முக்கியத்துவத்தை இனங்கண்டு, அரச மற்றும் தனியார் ஆகிய இரு தரப்புக்கும் டிஜிட்டல் மூலோபாயத்தை பின்பற்றுவதற்கு சமமாக ஆதரவளிப்பதற்கும், தரவு விடயப்பரப்பின் உரிமைகள் தொடர்பில் அர்த்தமுள்ளவகையில் செயற்படுவதற்கும் இந்தச் சட்டம் உதவும்.

அதற்கமைய, தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்த) சட்டமூலம், 2025 ஆம் ஆண்டும் 22 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்த) சட்டமாக நடைமுறைக்கு வரும்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி நிலையம் மாட்டியது

## அதன் பணிப்பாளர் சி.ஐ.டியால் கைது

ருமேனியாவில் வேலைவாய்ப்பு வழங்குவதாகக் கூறி, 7.4 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்த மஹரகமவில் இயங்கி வந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தின் பணிப்பாளரை குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் வெள்ளிக்கிழமை நுகேகொடை முதன்மை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், நவம்பர் 14 வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு 400க்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவு-1 மேற்கொண்ட விசாரணைகளின் போது, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கும் இது குறித்து 117 முறைப்பாடுகள் கிடைத்துள்ளமை தெரிய வந்துள்ளது.

விசாரணைகளின்படி, வெளிநாட்டு வேலைவாய்ப்பை எதிர்பார்த்து வந்த நபர்களிடமிருந்து குறித்த முகவர் நிலையம் 850,000 ரூபா முதல் 1,850,000 ரூபா வரையான தொகையை வசூலித்துள்ளது தெரியவந்துள்ளது.




JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna




வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள்
ஆரம்பம்
20.04.2025

கற்கும் போதே
தொழில் ஆற்றக்
கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.11.2025இல் வெளியிடப்பெற்றது